உங்கள் திருமண அழைப்பிதழ்களை எங்களிடம் அச்சடித்து உங்கள் திருமண நாள் நினைவுப் பரிசாக உங்கள் பெயர், படம் பொறிக்கப்பட்ட Keytag ஐ இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

+94 77 31 60 600, +94 777 978 929

Since 1995

ஸ்டார் அச்சகம்

STAR PRINTERS

ALL TYPE OF PRINTING & STAMP MAKERS

502, பிரதான சாலை, சாய்ந்தமருது – 14.

ஸ்டார் – அச்சுக்கலையில் அனித்தரமான பிரகாசிப்பு

- Your Partner in Printing -

Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews

www.ceynews.lk

லீடர்: 03 | இதழ் -264 | 17.02.2023 | பக்கங்கள்: 06 | editorml21@gmail.com | விலை: 50/-

## முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின்

# குடியுரிமை இடைநிறுத்தம்!





முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவின் குடியுரிமை 7 வருடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்த நீதிபதி, 500 ரூபா அபராதமும் விதித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெத்திகே உத்தரவு பிறப்பித்தார்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது எதிர்க்கட்சியின் பொது வேட்பாளராக களமிறங்கிய சரத் பொன்சேக்காவிற்கு தேசிய சுதந்திர முன்னணியின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக, அந்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசம்மிலுக்கு 42 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது

## தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று (17) வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

## மக்கள் மீது வரிகளை சுமத்தாமல் மாற்று வழிகளை கையாளுங்கள்

### மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் வேண்டுகோள்



நாளுக்கு நாள் வாழ்க்கை செலவு அதிகரிப்பதால் மக்கள் வாழ வழியின்றி தவிர்ப்பதாகவும் அவர்களின் கஷ்டங்களை போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

02 ⏭

## விவசாயிகளுக்கு இலவச எரிபொருள் விநியோகம்



சீனாவின் உதவியின் கீழ் 9 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை இலங்கைக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சீனத் தூதுவர் இந்த பருவத்தில் பயிரிட்ட விவசாயிகளுக்கு முதல் தொகுதி எரிபொருளை அம்பாந்தோட்டை

02 ⏭

## ராஜபக்ஷக்களினால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் தலையில் கட்டி வேடிக்கை பார்க்கும் அரசாங்கம் - இம்ரான் மஹ்ரூப் எம்.பி சாடல்



எப்.முபாரக்

ராஜபக்ஷக்கள் செய்த ஊழலினால் ஏற்பட்ட பாதிப்புகளை மக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது என திருகோ ண மலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

02 ⏭

## பொருளாதார நெருக்கடி

### தேர்தலுக்கு நிதி வழங்குவதில் சிக்கல் - நிதி அமைச்சு அறிவிப்பு

நாட்டில் பொருளாதார நெருக்கடியினால் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான நிதியை வழங்குவதில் சிக்கல் காணப்ப டுவதாக நிதி அமைச்சின் செயலாளர் தேர்தல்கள்

02 ⏭

## நாடளாவிய ரீதியில் கறுப்பு வாரம்!

புதிய வரித் திருத்தங்களுக்கு எதிராக எதிர்வரும் 22ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் கறுப்பு வாரத்தை பிரகடனப்படுத்த அனைத்துத் துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

02 ⏭

## மக்கள் மீது வரிகளை சுமத்தாமல்...

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், புத்தளம் மாவட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடன் நேற்று (16) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மின்சாரக் கட்டணம் இலங்கையில் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. தொடர்ந்தும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக அறிவித்துள்ளார்கள். இவ்வாறான அழுத்தங்களால் மக்கள் எப்படி வாழ்க்கை நடத்துவது என்று திண்டாடுகின்றனர்.

கடந்த ஆட்சியாளர்களின் தவறுகள், பிழையான வழிநடாத்தல்கள் மற்றும் அநியாயங்களினாலேயே எமது நாடு இன்று குட்டிச்சுவராகி, அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அவ்வாறானவர்களை சேர்த்துக்கொண்டே ஜனாதிபதி ஆட்சியை நடத்துகின்றார். அவர்களை பகைக்காமல் பாதுகாக்கும் நிலையை ஏற்படுத்தி ஜனாதிபதி பல தவறுகளை மேற்கொள்கின்றார். இது நாட்டுக்குச் செய்கின்ற பாரிய துரோகமாகும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க மக்கள் மீது வரிகளை சுமத்துகின்றனர். கடந்த கால ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தவறுகளால் ஏற்பட்ட நஷ்டத்தை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிப்பது பாரிய அநியாயமாகும். எனவே, மக்கள் மீது சுமைகளை சுமத்துவதை விடுத்து, கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்களிடமிருந்து பெற வேண்டியதைப் பெற்று மக்களை பாதுகாக்க வேண்டும்.

மேலும், உரிய நேரத்துக்கு தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் தனித்தனியாக பிரிந்து செயல்படுவது போன்றே எண்ணத் தோன்றுகின்றது. மக்களின் வாக்குரிமையை அறிந்து, ஜனநாயகத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து, எதிர்வரும் தேர்தலை உரிய நேரத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கத்திடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது என்று கூறினார்.

## விவசாயிகளுக்கு இலவச எரிபொருள்...

துறைமுகத்தில் இன்று (17) விநியோகித்து வைத்தார்.

எரிபொருள் இருப்பில் ஒரு பகுதி மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க தெரிவித்திருந்தார்.

இதன் கீழ் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 15 லீட்டர் எரிபொருள் இலவசமாக வழங்கப்படும்.

## பொருளாதார நெருக்கடி, தேர்தலுக்கு...

ஆணைக்குழுவிற்கு இன்று அறிவித்துள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளுடன் இன்று (17) தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஆணைக் குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

அரச செலவினங்களை மட்டுப்படுத்தி வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு அமைய, நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளனர்.

இதனைத் தவிர, ஏனைய அத்தியாவசியமற்ற செலவுகளுக்கான ஒதுக்கீடுகளுக்கு நிதி அமைச்சரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என மற்றுமொரு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## நாடளாவிய ரீதியில் கறுப்பு...

அரசாங்கத்தின் புதிய வரித் திருத்தங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக தொழில் வல்லுநர்கள் ஒன்றியம் கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் கூடியிருந்தது.

பெற்றோலியம், துறைமுகம், மின்சாரம், நீர், வங்கி மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த பல வல்லுநர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## ராஜபக்ஷக்களினால் ஏற்பட்ட விளைவுகளை...

கிண்ணியாவில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ராஜபக்ஷக்கள் ஆட்சி பீடமேறியது முதல் நாட்டில் கமிசன் செயற்பாடுகள் அதிகரித்தன. ஊழல் உச்சக் கட்டத்தில் இருந்தது. பொருத்தமற்ற பொருளாதார நடைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. பொருட்களின் விலை 300 முதல் 500 வீதம் வரை அதிகரித்தன. இன்றும் அதிகரித்து வருகின்றன. எனினும் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் சொல்ல முடியாத அளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் மிகவும் சந்தோசமாக தைரியமாக நடமாடி வருகின்றார்கள். அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் அவர்களால் உருவாக்கப்பட்ட சகல நட்டங்களையும் இழப்புகளையும் பொதுமக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது.

ராஜபக்ஷக்கள் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகளும் அதனால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளும் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகலரும் இவற்றை விளங்கியிருக்கின்றனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. பொதுமக்கள் எப்படி கஷ்டங்களை அனுபவித்தாலும் ராஜபக்ஷக்களைப் பாதுகாப்பதே தனது கடமை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

இந்த விடயங்களை பொதுமக்களுக்கு மீள நினைவுபடுத்த விரும்புகின்றேன். நாட்டை பிச்சைக்கார நாடாக்கிய மொட்டுக் கட்சியினருக்கும் அவர்களுக்கு துணை போனவர்களுக்கும் நமது பொன்னான வாக்குகளை அளிக்கலாமா என்பதை அனைவரும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

அதேபோல இவ்வளவு அநியாயங்கள் செய்தவர்களைப் பாதுகாத்து தமது சுகபோகத்தை மட்டும் கவனத்தில் கொண்டு செயற்பட்டுவரும் யானைக் கட்சியினருக்கும், அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் வாக்களிக்கலாமா எனக் கேட்க விரும்புகின்றேன் என்றார்.

### அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின்

# தலைவராக மீண்டும் தபாலதிபர் பைசர் தெரிவு



அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டமும் முகாமைத்துவ சபைத் தெரிவும் சாய்ந்தமருது பாவா றோயலி மண்டத்தில் இடம்பெற்றது.

இதில் 2023/2024 ஆம் ஆண்டுக்கான நிருவாகத் தெரிவில் மீண்டும் தலைவராக தபாலதிபர் பைசர் தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச் செயலாளராக எம்.ஜே.எம். சல்மான், பொருளாளராக எஸ். தினே'குமார், பத்திராதிபராக எம்.எஸ்,எம். ஹனிபா, உப தலைவர்களாக எம்.சீ.எம், இர்பான், கே.எப். றிப்கா, பிரதிப் பொதுச் செயலாளராக எம்.எம்.ஏ. முபாறக், உதவிச் செயலாளர்களாக கே.எம்.எம். பஸ்மிர், எஸ்.எஸ். நஜீமா, உதவிப் பொருளாளராக எஸ்.டபிள்யு.எம். றிஸ்லி, உதவிப் பத்திராதிபராக (சிங்களம்) யூ.ஏ.மஜீட், செயற்குழு உறுப்பினர்களாக ஏ.ஜே. அப்துல்லாஹ், எம்.ரி.எம். றமீஸ், எம்.ரி.எம். பைறூஸ், துஸான் கே. பத்மநாதன், எஸ். நாகராஸா எம்.ஐ.எம். இனாஸ், கே.எம்.பர்ஹானா, பர்ஸானா றிஸ்கான் ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தல் விவகாரத்தில் விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லை – முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி

எம்.ஜி.ஏ.நாஸர்

உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவது ஜனாதிபதிக்கு ஆப்பிழுத்த குரங்கின் கதைபோல அமைந்து விட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் தேர்தலை நடாத்தினாலும் ஜனாதிபதிகும் அவரது கட்சிக்கும் ஆபத்து உள்ளது. நடாத்தா விட்டாலும் ஆபத்து இருக்கிறதென அவர் மேலும் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களை அறிமுகம் செய்து ஏறாவூர் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் ரவூப் ஹக்கீம் உரையாற்றுகையிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அரசியல் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

ரவூப் ஹக்கீம் இங்கு தொடர்ந்து பேசுகையில்,

இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விவகாரத்தில் தாங்கள் ஏனைய கட்சிகளுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுத்துவருகின்றோம். தேர்தலை நடாத்துவதற்காக எதிர்தரப்பிலுள்ள ஏனைய நேசசக்திகளுடன் சேர்ந்து போராட்டம் நடாத்தி வருகின்றோம்.

இதில் எந்த விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை. ஏனென்றால் ஒரு ஜனநாயக நாட்டில் கோடிக்கணக்கான பணத்தை எத்தனையோ விடயங்களுக்கு செலவிடுகின்ற அரசாங்கம் தேர்தல் நடாத்துவதற்கு மட்டும் நிதி இல்லை என்ற நொன்டிச்சாட்டை சொல்லி தேர்தலை இழுத்தடிப்புச் செய்வது நிச்சயமாக அவர்களுக்கு ஆபத்தான விடயமாகும்.

தேர்தலை நடாத்துவதன் மூலம்தான் ஜனாதிபதிக்கு இருக்கின்ற கொஞ்ச நம்பகத் தன்மையையாவது பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டுக்கட்சி என்று ஜனாதிபதிக்குத் தெரியும். இருந்த போதிலும் நாங்கள் ஜனாதிபதியுடன் தேவையற்ற முரண்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வதில்லை.

தற்போதைய ஜனாதிபதி எமது அரசாங்கத்தில் பிரதமராகவும் இருந்தவர். அரசியலில் நீண்ட காலமாக தனக்கு ஜனாதிபதி பதவி கிடைக்குமா கிடைக்குமா என்று இலவுகாத்த கிளிபோல இருந்தவருக்கு இப்போது ஜனாதிபதி பதவி கிடைத்திருப்பது எமக்கும் சந்தோஷம். ஆனால் அவர் வங்குரோத்து நிலைக்குவந்து தேர்தலை இழுத்தடிப்பது அவருக்கும் சங்கடமான




நிலைதான். இவ்வளவு தூரம் வந்துவிட்ட விவகாரத்தினை இனியும் இழுத்தடிப்பது சிரமம்தான். எனினும் தேர்தலை நடாத்துவதன் மூலம் சந்திக்கின்ற ஆபத்தைவிட நடாத்தாமல் இருப்பதனால் ஏற்படும் ஆபத்திற்கு முகம்கொடுக்க முடியும் என்ற அசட்டு தைரியம் ஜனாதிபதிக்கு இருப்பதுபோலவே தெரிகிறது என்றார்.

# 13ஜ

# முற்றாக ஒழிக்க கோருவதால் மீண்டும் நாட்டில் அமைதியின்மை ஏற்படும் : முன்னாள் மாகாண அமைச்சர் உதுமாலெப்பை தெரிவிப்பு

றியாஸ் இஸ்மாயில்

இலங்கை அரசியல் அமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 36 வருடங்கள் முடிவடைந்த போதிலும் முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலை தொடர்கின்றது. தமிழ் தலைவர்கள் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை அரசியல் தீர்வின் தொடக்கப் புள்ளி மட்டும்தான் என ஏற்றுக் கொண்டிருக்கும் நிலையில் நமது நாட்டில் சில சிங்கள கட்சிகளின் தலைவர்களும், பௌத்தமத தலைவர்களும் இனவாதிகளும் இணைந்து 13ஜ முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கூறுவது மீண்டும் நமது நாட்டில் அமைதியை இழக்க வேண்டிய நிலை உருவாகலாம் என முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள், இளைஞர் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் அட்டாளைச்சேனை இக்றாஹ் வட்டாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதி உயர்பீட உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் நடைபெற்றதில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து இங்கு உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நாடு பௌத்த நாடு இங்கு 13ஜ முழுமையாக அமுல்படுத்த் முடியாது பிக்குகள் எதிர்ப்பதால் எதுவும் செய்ய முடியாது எனக் கூறியுள்ளார். சரத் விஜயசேகர பாராளுமன்ற உறுப்பினர் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறுகின்றார், விமல் வீரவன்ச 13ஜ பாராளுமன்றத்தின் ஊடாக இல்லாமல் செய்ய வேண்டுமெனக் கூறுகின்றார்.

இவர்கள் கடந்த 30 வருட கால யுத்த நிலைமையை மறந்து இனவாதம் பேசுகின்றனர். யுத்தத்தில் வட – கிழக்கு மாத்திரமன்றி முழு நாட்டிலும் அமைதியற்ற நிலையும் அச்சமும் ஏற்பட்டது என்பதை 13ஜ முற்றாக ஒழிக்க வேண்டுமென பொங்கியெழும் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களும், பௌத்த தலைவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று நமது நாட்டில் அரசுக்கு எதிராக மக்கள் ஒன்றிணைந்துள்ளார்கள். பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் சஜித் பிரமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இணைந்து செயல்படுகின்றனர். ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றால் சஜித் பிரேமதாஸாவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சகோதர கட்சிகளுடன் இணைந்து, அதிகமான ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை தோன்றியுள்ளது. சிலவேளை சஜித் பிரேமதாஸாவின் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி ஆளும் கடசியாகவும் எதிர்க்கட்சியாக ஜேவிபி வரக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தமிழ் சமூகத்திற்கான இனப்பிரச்சினை விடயமாக ஒற்றுமையாக செயல்பட்டு வருகின்றனர். இதேபோன்று முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து நமது சமூகம் தொடர்பான விடயங்களில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நமது நாட்டில் சஹ்ரானின் குண்டுவெடிப்பு நிகழ்வுக்குப் பின் முழு முஸ்லிம் சமூகமும் பயங்கரவாதிகள் என வீண்பழி சுமத்திய இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத செயற்பாடுகளை முன்னெடுத்தனர். முழு முஸ்லிம் சமூகத்தினையும் பாதுகாப்புப் படையினர் சந்தேக் கண்கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

வீட்டில் சாதாரனமாக பாவனைக்கு வைத்த கத்திகளைக்கூட முஸ்லிம்கள் வைத்துக்கொள்ள முடியாத நிலை தோன்றியது. இந்த வேளையில் இலங்கை முஸ்லிம்களுக்கு தலைமை கொடுத்து சக முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் இணைந்து அவசரமாக அனைவரும் அமைச்சுப் பதவிகளிலிருந்து ராஜினாமா செய்யும் தீர்மானத்தையெடுத்தனர். இந்த தீர்மானத்தினால் நமது நாடு அதிர்ந்தது. அமைச்சரவையில் அங்கம் பெற்ற எல்லா முஸ்லிம்களும் தங்களின் பதவிகளை ராஜினாமா செய்தனர்.

இதன் பின்னர்தான் நமது நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன என்பதனை நமது முஸ்லிம் சமூகம் மறந்துவிடக் கூடாது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடாத்துவதற்கு நாங்கள் முற்பட்ட போது அரசுக்கு ஆதரவான சிலர் மக்கள் போராட்டங்களை நடாத்துவதற்கு எதிராக செயற்பட்டனர். அத்தனை சதிகளையும் முறியடித்து கிழக்கு மாகாணத்தில் அம்பாரை மாவட்ட மக்களின் ஒத்துழைப்புடன் அட்டாளைச்சேனையில் மாபெரும் மக்கள் பேரணியை அரசாங்கத்திற்கு எதிராக நடாத்திக் காட்டினோம். இந்த நிகழ்வுக்குப் பின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரின் கீழ் மக்கள் சுதந்திரமாக இணைந்து செயற்பட்டனர். கட்சியின் தலைமையையும் கட்சியையும் பலப்படுத்துவதன் ஊடாகவே நமது முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெறலாம். தேர்தல்களில் வெற்றியை பணம் மாத்திரம்தான் தீர்மானிக்கிறது என சிலர் நினைக்கின்றனர்.

இறைவனின் நாட்டம் இல்லாமல் எதுவும் நடைபெறாது என்ற நம்பிக்கையுள்ளவர்கள் நாங்கள். ஒரு வேட்பாளரை ஊர் கூடி வெற்றிபெற வேண்டும் என வாக்களித்தாலும், இறைவன் அவரை தோல்வியடைய வைக்க வேண்டும் என்றால் தோல்வியடைய வைப்பான். இன்னும் ஒரு வேட்பாளரை ஊர் மக்கள் எல்லோரும் இணைந்து தோல்வியடைய வாக்களித்தால், அந்த வேட்பாளரை இறைவன் வெற்றியடை வைக்க நாடினால், அவர் வெற்றி பெறுவார். இந்த நம்பிக்கை எம் மத்தியில் உள்ளது.

பணத்தின் ஊடாகவே தேர்தல்களில் வெற்றி கிடைக்கிறது என்றிருந்தால் சென்ற பொதுத்தேர்தலில் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பல கோடீஸ்வரர்கள் வெற்றியடை ந்திருப்பார்கள். இவர்கள்




தோல்வியடைந்தமை நமக்கொரு பாடமாகும்.

நீண்டகால இடைவெளிக்குப்பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் றஊப் ஹக்கீமின் பணிப்புரைக்கமைவாக நாடு முழுவதும் கிராம சேவகர் பிரிவுகளிலும் முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள், இளைஞர், மகளிர் கிளைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள் கிராம மட்டத்தில் மக்களுடன் இணைந்து நமது கட்சி வளர்ச்சியில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும்.

இந்த அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க 23 தடவைகள் முயற்சி செய்திருக்கின்றது. ஜனநாயக உரிமைகளை மதிக்காது தேர்தலை ஒத்திவைத்தால் முஸ்லிம் காங்கிரஸ் ஏனைய சகோதர கட்சிகளுடன் இணைந்து தேர்தலை நடாத்தக்கோரி மக்கள் பேரணிகளை நடாத்தும் செயற்பாடுகளை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் றஊப் ஹக்கீம் முன்னெடுத்து வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.




# வட மாகாணத்திற்கு நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம்

குழந்தைகளுக்கான பாணி மருந்துகள், நோயாளிகளுக்கான அத்தியாவசிய மருந்து வகைகள் எமது வைத்தியசாலையில் இல்லை. நோயாளிகளை வெளியே வாங்குமாறு கூறவும் எமக்கு மனம் வரவில்லை. ஏனென்றால் மக்கள் ஏற்கனவே கஷ்டத்தில் உள்ளார்கள். அவர்களை மேலும் கட்டத்திற்குள் தள்ளுவதற்கு மனமில்லாமல் இருக்கிறது. வைத்தியர் சேவையை சரியாக செய்ய முடியாமல் உள்ளது.

இந்த தொழிலில் இருந்து விலக வேண்டும் என்ற அளவிற்கு உள்ளது என வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் ரதினி காந்தநேசன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் நேற்று (12) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் உறவுகளும் ஏனைய நல்லுள்ளம் கொண்ட உறவுகளும் எங்களுக்கு போதுமான அளவு குழந்தைகளுக்கான மருந்துகளையும், சளி மற்றும் காயம் போன்றவற்றிற்கு பயன்படுத்தும் மருந்துகளையும் வழங்கினால் நன்றாக இருக்கும்.

வட மாகாணத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காணப்படுகிறது. வடக்கு மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் பெருமளவு நிதி வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடானது மிகவும் குறைவாக இருப்பதாகவே எனக்கு தெரிகிறது.

யாழ்ப்பாண வைத்தியசாலைகளில் உள்ள ஆறுக்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ்கள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட பழுது பார்க்கும் நிலையங்களில் திருத்தப்பட்டு, அதனை மீள எடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் திருத்திய



ஆம்புலன்ஸ்களை மீள எடுப்பதற்கு நிதி வசதி இல்லை.

ஆகையால் ஒரு சில ஆம்புலன்ஸ்கள் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் சேவையில் ஈடுபடுகிறது. இதனால் எரிபொருள் வீண்விரயம் செய்யப்படுவதுடன் ஆம்புலன்ஸ/ம் விரைவில் பழுதடைகிறது. எமக்கு கிடைக்கும் மருந்துகளின் அளவுகளும் குறைவாகக் காணப்படுகிறது.

அந்த மருந்துகளை எடுத்து வருவதற்கு ஆம்புலன்ஸ் இல்லாமல் தாமதிப்பதால் எமக்கான மருந்துகள் வேறு வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படுகிறது.

எனவே புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற உறவுகளும் நல்லுள்ளம் கொண்ட உறவுகளும் முன்வந்து எமக்கான மருந்துகள் வாங்குவதற்கும் ஏனைய வைத்திய சேவைகளுக்குமான உதவிகளை வழங்க வேண்டும் – என்றார்.

## யாழில் மாபெரும் முத்திரை கண்காட்சி





முத்திரை மற்றும் நாணயக் கண்காட்சி இளவாலை சென் ஜேம்ஸ் தேவாலயத்தின் மண்டபத்தில் நேற்று (12) நடைபெற்றது.

அருண்பணிச்சபை மற்றும் புனித ஞானப் பிரகாசியார் மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த முத்திரை கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை பிறப்மிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் வாமணனின் முத்திரைகள் மற்றும் நாணயங்களே இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

80 நாடுகளின் முத்திரைகள், 65 நாடுகளுக்கும் மேற்பட்ட நாணய குற்றிகள் மற்றும் நாணயத் தாள்கள் இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டன.

1996ம் ஆண்டில் இருந்து அவர் முத்திரைகள் மற்றும் நாணயங்களை சேகரிப்பதை தனது பொழுது போக்காக செய்து வருவதாக தெரிவித்தார்.

## துருக்கியில் உயிர் நீத்த மக்களுக்காக

### சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிகளில் ஜனாஸா தொழுகை

**அஸ்ஹர் இப்றாஹிம்**

நிலநடுக்கத்தினால் உயிர் நீத்த துருக்கியைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் கீழ் உள்ள சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களைச் சேர்ந்த ஜும்ஆப் பள்ளிவாசல்களில் (10) ஜ/ம்ஆத் தொழுகையின் பின் ஜனாஸாத் தொழுகை இடம்பெற்றன. இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் பணிப்புரையின் பேரில் இத் தொழுகை நடத்தப்பட்டது.

## ஆசிரியை மர்மமான முறையில் மரணம்





**எஸ்.எம்.எம்.முர்ஷித்.**

கல்குடா வீதி வாழைச்சேனையில் தனிமையில் வீட்டில் வசித்து வந்த ஆசிரியை ஒருவரின் சடலம் வியாழக்கிழமை கண்டு பிடித்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கல்குடா வீதி வாழைச்சேனையைச் சேர்ந்த திருமதி பாஸ்கரன் சற்குணதேவி (வயது 52) என்ற 4 பிள்ளைகளின் தாயான ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 15 நாட்களாக தமது சகோதரியின் தொலைபேசி தொடர்பில் இல்லை என்றும் அவர் தொடர்பான தகவல்கள் எதுவும் தெரியவில்லையென அவரை தேடிப் பார்க்கும்படி வவுனியாவில் உள்ள உறவினர் வாழைச்சேனைப் பிரதேசத்தில் வசிக்கும் தமது உறவினருக்கு தகவல் வழங்கியுள்ளார். பிரதேச கிராம சேவகருக்கு தகவல் வழங்கியதை அடுத்து பொலிசாரின் துணையுடன் அவர் வசித்த வீட்டில் சென்று பார்த்தபோது வீட்டின் கதவு ஜன்னல்கள் உடைநது காணப்பட்டதுடன் உயிரிழந்த நிலையில் குறித்த பெண்ணின் சடலம் கண்டுபிடித்துள்ளனர்.

இவர் கடந்த 10 வருடங்களாக மலேஷியா நாட்டில் தொழில் புரிந்து வந்த நிலையில் கடந்த 2 மாதங்களாக வாழைச்சேனையில் உள்ள தமது வீட்டில் வசித்து வந்துள்ளார். தான் வசித்து வந்த வீட்டினை விற்பனை செய்து விட்டு வவுனியா திரும்பும் நிலையில் வீட்டினை விற்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் இவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளமை தமக்கு கவலையளிப்பதாக மரணமடைந்த பெண்ணின் சகோதரி தெரிவிக்கிறார்.

கணவர் யாழ்ப்பாண பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகஸ்த்தராக கடமையாற்றி வருகின்றார் என்றும் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி வழங்களும்

**எஸ்.எம்.எம்.முர்ஷித்.**

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையினால் பொது மக்களுக்கான இலவச கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வும் சபை கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம் பெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் க.கமலநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சபை செயலாளர் ச.நவநீதன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அப்துல்லா ஹாரூன், சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

சமூக அபிவிருத்திப் பிரிவு மட்டக்களப்பு லியோ கழகம், லயன்ஸ் கழகம், வாழைச்சேனை குட்வில் தனியார் வைத்தியசாலை





ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

குறித்த இலவச கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கல் நிகழ்வில் 400க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டுள்ளனர்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் மற்றும் புற்றுநோய் ஒழிப்பு தினம் என்பவற்றை முன்னிட்டு விழிப்புணர்வு சைக்கிள் ஓட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தொற்றாய் நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம் ஐ எம் எஸ் இர்சாத் இணைப்புச் செய்யப்பட்ட இச்சைக்கிள் ஓட்ட நிகழ்விற்கு மருதமுனை ரைடர்ஸ் ஹப் சைக்கிளோட்ட கழகத்தினரின் பங்களிப்புடன் இச்சைக்கிள் ஓட்ட விழிப்புணர்வு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.ஏ வாஜித் மற்றும் பணிமனையின் பிரிவு தலைவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டு தமது ஆதரவினை வழங்கினார் கள்.

படம்: நூருள்ஹுதா

# தமிழர்களுக்கு தீர்வின்றேல் முஸ்லிம்களுக்கும் தீர்வில்லை

## அடித்துக் கூறுகிறார் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் அப்துல் மஜீத்

எம்.எம்.அஸ்லம்

13வது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு என்பன தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தானது எனவும் அது முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பாக அமைந்து விடலாம் எனவும் சிலர் கூறுவது அவர்களது அறியாமையா கும். உண்மையில் இத்தகைய அதிகாரப் பகிர்வின் மூலம் தான் முஸ்லிம்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் வடக்கு- கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார். தமிழர்களுக்குத் தீர்வின்றேல் முஸ்லி ம்களுக்கும் தீரவில்லை என்பதை ஆணித்தரமாக கூறி வைக்க விரும்புகின்றேன் எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு சாசனம் சிறுபான்மை மக்களின் அபிலாசை களை முழுவதுமாக புறந்தள்ளி சிங்கள பௌத்த மேலாண்மையை வலியுறுத்தி நின்றது. குறிப்பாக சோல்பரி அரசியல் யாப்பில் இடம் பெற்றிருந்த செனட் சபை (மூதவை) இல்லாதொழிக்கப்பட்டதுடன் பௌத்த மதத்தை அரச மதமாகவும் சிங்கள மொழியை அரச கரும மொழியாகவும் பிரகடனம் செய்திருந்தது .

அக்குடியரசு சாசனத்தை தமிழ் மக்கள் எதிர்த்து நின்றதுடன் அப்போது நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அமிர்தலிங் கம் பகிரங்கமாக அரசிய லமைப்பை தீயிட்டுக் கொளுத்தினார். இதன் விளைவாக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.

அதுபோல் கடந்த 8ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரையை உரையாற்றிக் கொண்டிருக்கையில்

பௌத்த பிக்குமார் பாராளுமன்றை நோக்கி ஆர்ப்பாட்டமாக சென்றதுடன் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொளுத்தினர். அவர்களை பொலிசார் கைது செய்ய முன்வரவில்லை. பொலிசாரின் அச்செயலானது நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளது போல் என்னத் தோன்றுகிறது.

1957ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டா- செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஆயிரக் கணக்கான பிற்குமார் பிரதமரின் இல்லத்திற்கு முன்பாக சத்தியாக்கிரகம் இருந்தனர். இதனால் வேறு வழியின்றி அவ் ஒப்பந்தம் கிழித்து வீசப்பட்டது. 1965இல் ஏற்படுத்தப்பட்ட டட்லி- செல்வா ஒப்பந்தத்தை அன்றைய எதிர்கட்சியான சுதந்திரக் கட்சியினர் தோல்வியடையச் செய்தனர். இனப்பிரச்சனைக்குத் தீர்வாக 1981ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை தோல்வியைத் தழுவிக் கொண்டது

போல் மாகாண சபை முறைமை யையும் தோல்வியடையச் செய்வதற்கு பௌத்த சிங்கள கடும் போக்குவாதிகள் முயன்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.



13ஆவது திருத்தம் என்பதும் அதிகாரப் பகிர்வு என்பதும் தமிழ் மக்களுக்கே உரித்தான சொந்த விடயம் என முஸ்லிம் சமூகத்தில் பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். அது அவர்களின் அரசியல் அறியாமையை பிரதிபலிக்கின்றது. அதிகாரப் பகிர்வு என்பது வடக்கு கிழக்கிற்கு மாத்திரமன்றி அதற்கு வெளியே உள்ள 07 மாகாண சபைகளுக்கும் உரியது என்பதனையும் விஷேடமாக சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளையும், பிராந்திய அபிவிருத்தியையும் அவர்களது வாழ்விடங்களை உறுதிப்படுத்துவதும் அதில் தங்கியுள்ளது என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டு செயற்பட முன்வர வேண்டும்- என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குகின்ற அரசாங்கம் தேவை:

## -தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸ்ஸநாயக்க-






தேசிய ஒத்துழைப்பு வழங்ககூடிய நாடு தேவை. இனவாதம் என்பதே இந்த ஆட்சியாளரின் ஒரே வழி என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் எற்பாட்டில் யாழ் மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடான சந்திப்பு இன்று (17) யாழ். டீம்பர் மண்டவத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துதெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டுக்கு நல்ல அரசாங்கம் தேவை மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்குகின்ற அரசாங்கம் தேவை அதற்காக ஒன்றிணைய வேண்டும்.

இந்த நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார் 13 ஆவது திருத்தச்சட்டத்தினை வழங்குவோம் என்று. பொலிஸ், காணி, அதிகாரத்தினை வழங்குவோம் என்று. இது ஏன்? தென் பகுதியில் பெரிய பிரச்சினையினை உருவாக்கி அங்கு ஆர்ப்பாட்டங்களை உருவாக்க உண்மையான பிரச்சினை ஆட்சியாளர்களுக்கு எதிராக இருக்கின்றது. அதனைவிடுத்து ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களை குழப்பி வடமாகாண தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுத்து கின்றார்.

இந்த ஜனாதிபதி நான்கரை வருடங்கள் பிரதமராக இருந்தார். புதிய அரசியலமைப்பு யாப்பினை தயாரிப்ப தற்கு ஒரு சபை தாபிக்கப்பட்டது. அதில் ஒரு குழுவினை அமைத்தனர். இதில் 82 கலந்துறையாடல்கள் இடம்பெற்றன.

அதில் எந்ததொரு அறிக்கையும் புதிய அரசியலமைப்பு யாப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்க வில்லை.

வடக்கின் பிரச்சினை வடக்கின் சூதாட்டாமான நிலையினை வைத்து யிருக்க வேண்டிய நிலையினை உருவாக்கதான் வடக்கில் தேர்தல் வரும்போது 13 ஆவது திருத்தச் சட்ட பந்தினை வடக்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் வி.விக்கினேஸ்வரன், தென் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் இருவரும் பந்து அடித்து விளையாடுகின்றனர் என்றார்.

இதில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.



